உ

முருகன் துணை

திரு அங்கமாலை

(உரையுடன்)



வெளியிட்டோர்:

கருப்பண முதலியார் ஸ்டோர்ஸ்

பட்டு & நூல் ஜவுளி வியாபாரம்,

53, கிடங்குத் தெரு, சென்னை-1.

1958.

உ
சிவமயம்
திருச்சிற்றம்பலம்

திருநாவுக்கரசு சுவாமிகள் அருளிய

திரு அங்கமாலை

(விரிவுரை)

உரை ஆசிரியர்:
குகஸ்ரீ ரசபதி

வெளியிட்டோர்:
கருப்பண முதலியார் ஸ்டோர்ஸ்
பட்டு & கைத்தறி ஜவுளி
53, கிடங்குத் தெரு, சென்னை-1.

1958

திருப்புகழமிர்தம் அச்சகம்,
89, சிங்கண்ணசெட்டித் தெரு,
சிந்தாதிரிப்பேட்டை,
சென்னை-2.

உ

முருகா

அன்பளிப்பு

திருவுடையீர்!

வெற்றிவேல் பரன் வழிபாட்டுள் மிகச் சிறந்தது ஸ்கந்த ஷஷ்டி. அந்த ஆறு நாட்களிலும் வழிபட்டோர் இகபர நலன்களை எளிதின் எய்துவர்.

அன்பர்களின் ஆசி கருதி, ஆண்டுதோறும் வித்தகத் துதிநூல் ஒன்றை வெளியிட்டு வருகிறோம்.

அதுபோல் இவ்வாண்டும், "திருமுறைத் திருஅங்க மாலை" விரிவுரையை அன்பின் கொடையாக அளிக்கின்றோம்.

உரை எழுதி உதவியவர் அருமைத் திருமுறைகளில் ஆர்வமிக்க அன்பர் குகஸ்ரீ ரசபதியவர்கள். அவர்கட்கு எம்நன்றி என்றும் உரியது.

அடியார்கள் இதை ஓதி உணர்ந்து, பயன் விளைய ஆக்கை தந்த பரனை வழிபட்டு, இம்மை மறுமைப் பயன்களை எய்துவாராக.

அன்புள்ள

கருப்பண முதலியார் ஸ்டோர்ஸ்.

உ
சிவமயம்

திருநாவுக்கரசு சுவாமிகள் அருளிய

திரு அங்கமாலை

"சிந்தனை செய்ய மனம் அமைத்தேன்;
செப்ப நா அமைத்தேன்;
வந்தனை செய்யத் தலை யமைத்தேன்;
கை தொழ அமைத்தேன்;
பந்தனை செய்வதற்(கு) அன்பமைத்தேன்
மெய் அரும்ப வைத்தேன்;
வெந்த வெண் நீறணி யீசற்(கு)
இவை யான் விதித்தனவே"
—பெருமாக் கோதையார்.

திருநாவுக்கரசு சுவாமிகள்

திருமுனைப்பாடி நாட்டில் உள்ள திருவாமூரில் இவர் திருவவதரித்தார். பெற்றோர் மருள் நீக்கியார் என்று பெயரிட்டனர். சமணர்கள் தந்த பெயர் தருமசேனர். திருவதிகை யீசர் வைத்த பெயர் திருநாவுக்கரசர். அப்பர் என்ற பெயரால் திருஞான சம்பந்தர் அழைத்தார். பின்னைய இரண்டு திருப்பெயர்களே பெரு வழக்காயின. அப்பர் வாழ்க்கையில் நிகழ்ந்த அற்புதங்கள் பல.

பக்திப் பெருக்கால் இவர் பாடிய பதிகங்கள் பல. சமய குரவருள் இவர் ஒருவரே 81 ஆண்டுகள் இருந்தவர். சிவத் தல யாத்திரையில், திருப் பூந்துருத்தி எனும் திருப்பதி, இவருடைய திருவுளத்தைக் கவர்ந்தது.

"பூந்துருத்தி பூந்துருத்தி யென்பீ ராகில்
பொல்லாத புலால் துருத்தி போக்க லாமே"

என்று ஓதி உருகிய உளத்தொடு, அப் பதியில் ஆர்வம் மிக்க அப்பர் பாடிய திருப்பதிகம் திரு அங்கமாலை.

திருநாவுக்கரசர் எனும் நலம்சிறந்த பெயர்க்கு ஏற்ப அவர் பாடிய இத் திருப்பதிகம், தூய்மை உள்ளங்களைத் தொடுகிறது. வார வழிபாடு செய்வார்க்கும், இதுவே வழிகாட்டி.

திரு அங்கமாலை

இத் தொடர்; அங்கத்தைப் பற்றிய மாலை யென விரியும்; இரண்டனுருபும் பயனும் உடன் தொக்க தொகை. திரு – மேன்மையை விளக்கும் அடைமொழி.

தம் தலை முதலிய அங்கங்களைக் குறித்துப் பாடும் பாக்களின் தொகுதி யாதலின், இப் பதிகம் அங்கமாலை எனப் பெற்றது.

96 வகைப் பிரபந்தங்களுள் ஒன்ருன அங்கமாலை வேறு; அதைச் சேர்ந்ததன்று இது. (ஆடவர் அவயவங்களையோ, அரிவையர் அங்கங்களையோ, பாதாதி கேசமாக, அல்லது கேசாதி பாதமாக வெண்பாவாலோ, அல்லது வெளி விருத்தத்தாலோ பெரிதும் புனைந்து பாடுவது அப் பிரபந்தம்.)

இது, உறுப்புக்கள் பயனடைய உபதேசிப்பது.

இயல், இசை, நாடகம் எனும் முத்தமிழில் இது, இயல் தமிழும் இசைத் தமிழுமாக இயைந்தது. இரண்டு அடியாய், முதலடியில் தலை, கடல் என்பன போன்ற தனிச் சொற்களும், அந்த அந்த அடிகளின் முதல் சீர்க்கு ஒத்த மோனையுமுடையது. தாள ஒத்திற்குத் தக்கபடி, எழுத்துக்களைக் குறுக்கியும் நீட்டியும் இசைக்கப் பெறுவது. முதலடியின் முற்பகுதி, இரண்டாம் அடியின் பிற்பகுதியாய் மடக்கி வருவது. இசைப்பாவில் ஒன்றற்குரிய இலக்கணம் கொண்டது.

''திருத்தாய் செம் போத்தே!—திரு
மாமகள் தன் கணவன்
மருத்தார் தொல்புகழ் மாதவ னைவரத்
திருத்தாய் செம்போத்தே''

''கரையாய் காக்கைப் பிள்ளாய்!—கரு
மாமுகில் போல் நிறத்தன்
உரையார் தொல்புகழ் உத்தம னைவர
கரையாய் காக்கைப் பிள்ளாய்''

எனவரும் திருமங்கை யாழ்வார் பெரிய திருமொழிப் பதிகமும், இவ் வரிசையில் இருப்பதை அறியலாம்.

பண்கள் 24; அவைகளுள் இரவுப் பண்கள் 12; பகல் பண்கள் 12. பகல் பண்களுள் ஒன்றுன இது, சாதாரிப் பண் எனப் பெறும். திருவிளையாடற் புராணத்து விறகு விற்ற படலத்தில், சாதாரிப் பண்ணின் அருமையை அறியலாம்.

உ
சிவமயம்
திருச்சிற்றம்பலம்

திரு அங்கமாலை

1 தலையே நீ வணங்காய் தலை
மாலை தலைக் கணிந்து
தலையா லேபலி தேருந் தலைவனைத்
தலையே நீ வணங்காய்.

பதவுரை:- தலையே=, நீ வணங்காய்=நீ வணங்குவாயாக; தலை மாலை தலைக்கு அணிந்து=(பிரமர்களின்) தலை(களைக் கோர்த்துச் சமைத்த) மாலையைத் தலைக்கு (அணிகலனாகத்)தரித்து; தலையாலே பலி தேரும் தலைவனை=(ஒரு பிரமனுடைய) மண்டை ஓட்டில் பிட்சை எடுக்கும் (எவ்வுயிர்க்கும்) தலைவனான இறைவனை; தலையே நீ வணங்காய்=, (எ-று).

தலையே! தகுதி யுடைய உறுப்புகள் எவற்றினும் தலைமை பெற்றாய்; தலையெனும் பெயரை அதனால் தாங்கினை. தலைவனாய் உயிர்களைத் தாங்குபவன் தற்பரன். அவனை வணங்குவது, உன் தலையாய கடன்.

சிவபுண்ணியம் மிக்கவர் சில ஆன்மாக்கள். தகுதி கண்டு, படைப்புத் தொழிலை அவர்கட்கு இறைவன் அருளினன். சிந்தனையிற் சிவமிருப்ப, தம்தம் செயல்களை அவர்கள் செய்தனர்.

இறப்பும் பிறப்பும் இல்லாதபடி, இறுதியில் அவர்தம் தலைகளை மாலையாகத் தரித்தது தானு. உரைத்த இவைகளையும் உணர்ந்து கொள். வாழ விரும்பினால், தலையே! வாழ்விக்கும் தலைமாலை யானை வணங்கு என்றபடி.

பசு புண்ணியத்தால் ஒரு ஆன்மாவிற்கு, பிரம பதவி கிடைத்தது. பல உலகங்களை அப் பிரமன் படைத்தான். அதன் பின், என்னதே தலைமை யென்று இறுமாந்தான். அவன் செருக்கைப் பயிரவர் அறிந்தார். படபடத்துப் பாய்ந்தார். பங்கயன் ஐந்து தலைகளுள் ஒன்றைப் பறித்தார். அறுந்த அத் தலை, சிவனார் திருக் கரத்தில் வந்தது. பெருமான் அதைத் தலை கீழாகப் பிடித்தான். அன்று முதல், பிட்சைப் பாத்திரம் ஆகியது அப் பெருந் தலை.

பதியைக் காட்டாத பசு போதத்தை, இடுக இதனில் எவரும் என்று, சற்பாத்திரமான ஆன்மாக்களைச் சார்கின்றான். இப்படித் 'தலையாலே பலிதேரும் தலைவன்' அவன்.

தலையாயார் தலைகளைத் தலையால் தாங்கும் தலைவனை, தடுமாறிய தலை ஒன்றைத் திருகித் திருக்கரத்தில் ஏந்தும் தற்பரனை, தலையே! நீ வணங்குவாயாக என்று, அருளொடு தலைக்கு அறிவித்தபடி.

"தாழ்த்த சென்னியும் தந்த தலைவன்" அவன் என்று, மற்றோரிடத்திலும் அறிவித்துளர்.

'கோளில் பொறியில் குணமிலவே எண்குணத்தான்
தாளை வணங்காத் தலை'

என்று புகல்கிறது பொது வேதம்.

"தலையால் வணங்குவார் தலையானார்களே" என்றார் சம்பந்தர்.

'வந்தனை செய்யத் தலையமைத்தேன்' என்றார் கழறிற்றறிவார்.

சர்வசங்கார காலங்கள்தோறும், ஒடுங்கும் பிரமர்களது தலைகளை மாலையாகத் தரித்து, தான் என்றும் அழிவின்றி யிருப்பவன் எனலை உயிர்கள் உணர உணர்த்துகிறார் உமாபதி என்பது, 'தலைமாலை தலைக்கணிந்து' என்பதன் குறிப்பு.

'தலைவணங்கிக் கைகூப்பி ஏத்த வல்லார்
திரிதலால் தவமுடைத்து இத் தரணிதானே!'

என்றார் பிறரும்.

தலையே என்பதில் உள்ள ஏகாரம், விளியுருபு. வணங்காய் - ஏவல் ஒருமை வினைமுற்று; ஆய் - விகுதி. தலையால் எனுமிடத்து மூன்றனுருபு, தலைகொண்டு எனக் கருவிப் பொருளில் நின்றது; ஏ-இசை நிறை. தேரும் - எதிர்காலப் பெய ரெச்சம்; இது காலத்தை உணர்த்தாமல், உரிய தன்மையை உணர்த்தியது. பலிதேரும்-பிட்சை யிடும் இடம் நாடிச் செல்லும். தலைவன்-தலைமை யுடையோன்; இது, தலைமை யெனும் பண்பி னடியாகப் பிறந்த பெயர்; வ் - பெயரிடை நிலை; மீட்டு மொருதரம் தலையே நீ வணங்காய் என்றது. அன்பு பற்றி வந்த அடுக்கு. தலையெனும் பல சொல் ஒரே பொருளில் பலதரம் வந்தமை யின், இது சொல்பொருள் பின்வரு நிலையணி.(க)

2 கண்காள் காண்மின்களோ கடல்
நஞ்சுண்ட கண்டன்றன்னை
எண்தோள் வீசிநின் றுடும்பி ரான்றன்னைக்
கண்காள் காண்மின்களோ.

பதவுரை:- கண்காள் காண்மின்களோ = கண்களே தரிசியுங்கள்; கடல் நஞ்சுண்ட கண்டன்தன்னை = (உயர்ந்த பாற்) கடலில் உதித்த ஆலத்தை அமுது செய்து நிறுத்திய திருக்கழுத்தை யுடையவனும்; எண் தோள்வீசி நின்றுஆடும் பிரான்தன்னை = எட்டுத் திருத்

தோள்கள் (எத்திசையிலும் எட்ட) வீசி நின்று திரு நிருத்தம் புரிபவனுமான சிவபிரானை; கண்காள் காண் மின்களோ =, (எ-று).

கண்களே! காண் தொழில் உடையவர்கள் நீங்கள்; அதனால், கண்கள் எனும் பெயர் கொண் டீர்கள்.

'கண் அவனை யல்லது காணா'

என்றும்,

'காணாதார் கண் என்றும் கண்ணல்ல கண்டாமே'

என்றும், ஆன்றோர் உங்கள் தொழிலை அறிவித் திருக்கின்றனர். பிரகிருதியின் இந்த விசித்திரப் பிரபஞ்சத்தில், காணப்படு பொருள் எதையும் சிவமாகவே காணுங்கள்.

விண்ணவர், ஆயுள் பெருக்கை விரும்பினர். பெருமான் அருளால் அது பெறலாம் என்பதை, மாபெரும் ஆணவத்தால் மறந்தனர். அதற்கான வழிவகையை, தம்அவலமதிகொண்டுஆய்ந்தனர். பாரில் உள்ள மூலிகைகளை யெல்லாம் பறித்துப் பாற்கடலில் இட்டனர். மந்தரத்தை மத்தாக்கி, வாசுகியைக் கயிறாக்கி, கடலை முயன்று கடைந்த னர். திருவருள் துணையின்றிச் செய்த செயலாத லின், கடைந்து நின்றவர், கை ஓய்ந்தனர்.

காளத்தை வாசுகி கக்கியது. எங்கும் விஷச் சுவாலை எழுந்தது. அது பொழுது அமரர் அழுது கதறினர்.

இரக்கம் மிக்க எம்பெருமான், அவர்முன் அபயவரத கரம் காட்டி எழுந்தருளினன். எழுந்த விடத்தை எடுத்தான். வெளியில் எறிந்தால் விபரீதம். ஆதலின், உறுத்த விடத்தைத் தானே உண்டான். இவ் வரலாறு. எவர்க்கும் என்றும் நினைவில் இருக்க, நிமல கண்டத்தில் அதை நிறுத்தினன். உலகம் அதனுல் உய்ந்தது.

உண்டது உள் செல்ல வேண்டும்; இன்றேல் வேண்டாத அது வெளியாகவேண்டும். தடைப் பட்டுத் தொண்டையில் தங்கில் வந்தேன் என்று மரணம் வரும். காலவிடம் கண்டத்தில் தடைப் பட்டும், இன்றும் எம்பெருமான் இருக்கின்ருன். இதனுல், இறப்பிலாதவன் அந்த இன்ப வடிவ இறைவன் எனலை யறிகிரும்.

'கண்ட ஆநந்தக் கடலினைக் கண்களால் முகந்து
கொண்டுகைகுவித்து எதிர்விழுந்துஎழுந்துமெய்குலைய
அண்டர் முன்புநின்று ஆடினர் பாடினர்'

என்று, அரிய இந்த அனுபவத்தைச் சேக்கிழாரும் அறிவிக்கிருர்.

பிரகிருதியின் பொய்ம்மாயத் தோற்றம் கண்டு, ஏமாந்து போக வேண்டா. இடர்ப்பாடு இலாத வன்; தடுமாற்றம் தவிர்ப்பவன்; பொன்வண்ணத் திருமேனியில் கண்டம் மட்டும் கறுத்தவன்; இப் படி நீலகண்டப் பேர் நிலைத்தானை, கண்களே! பார்த்த கண் வாங்காமல் பாருங்கள்; பயனுண்டு என்று, பரிவொடு கண்கட்குப் படித்தபடி.

நம்பன் எம்பெருமான் நால்தோளன்; மும் மல கண்டனன் எனும் பெயர்ப் பொருள் வெளிப்பட முப்புரம் எரித்த போது, எட்டுத் திருத்தோள்கள் எய்தினன். எண்திசை உயிர் களையும் காக்கும் இனிய திருக்கோலம் இது.

பயன் விளையச் சுழன்று சுழன்று அப் பரமன் ஆடும் பவுரிக் கூத்தில், வீசுகின்ற எட்டுத் தோள்களும் விளங்குகின்றன. காப்பாளனாக இப்படி யெல்லாம் காட்சி தரும் பெருமானைக் கண்டு கொண்டே யிருப்பது உங்கள் கடன் என்று, ஊன்றி மீட்டும் கண்கட்கு உபதேசிப் பதை, 'எண் தோள் வீசி நின்று ஆடும் பிரான்' என்பதில் அறிகிறோம்.

" ஆமாத்தூர் அம்மானைக்
காணாத கண்ணெல்லாம் காணாத கண்களே "

என்று ஆளுடைய பிள்ளையார் அறிவித்தல் இங்கு எண்ணத்தகும்.

> "கால காலனைக் கம்பனெம் மானைக் காணக்கண்
> அடியேன் பெற்றவாறே"

என்பது சுந்தரர் தேவாரம்.

கண்காள்—ஈற்றயல் திரிந்த விளி. காண்மின்- ஏவல் பன்மை; கள்—விகுதி; ஓ-இசை நிறை; ஓ கண்காள் என விளிக்கு அடையாக்கலுமாம்.(உ)

3. சேவிகாள் கேண்மின்களோ சிவன்
எம்மிறை செம்பவள
எரிபோல் மேனிப் பிரான் திறம் எப்போதும்
சேவிகாள் கேண்மின்களோ.

பதவுரை:- செவிகாள் கேண்மின்களோ=செவிகளே! கேட்பீர்களாக; சிவன்=(எவர்க்கும்) மங்களம் செய்பவனும்; எம் இறை=எமது தலைவனும்; செம்பவள எரிபோல் மேனிப் பிரான் திறம்=சிவந்த பவளமும் நெருப்பும் போன்ற செந்நிறத் திருமேனி யுடையவனு மான (இதயம் பிரியா) இறைவனுடைய திருவருள் பிரபாவங்களை; எப்போதும் செவிகாள் கேண்மின் களோ=எந்த நேரத்தும் செவிகளே கேளுங்கள்[எ-று].

'செவி அவனது எண்ணரும் சீரல்லது இசை கொள்ளா' என்றும்,

> "அல்லில் கதிதான் அருள் சிறந்த வேலிறை
> புல்லிநம் உள்ளம் புகுமேல், அவன் தாளில்
> கல்லென்னும் நன்னுதம் கேளாமோ கேளோய்"

என்றும்,

> 'நம்மானுள் வருமேல், அவன்
> கொன்றையம் தீங்குழல் கேளாமோ தோழீ'

என்றும், குணம் சிறந்த மேலோர் கூறுகின்றனர். இங்ஙனம் ஓசையாய், ஒலியாய், நாதமும் ஆனவன் நம் நம்பன்.

செவிகளே! சேவிக்கும் செயலால், உங்கட்குச் செவிகள் என்ற பெயர் உளது. சேவித்தல்-சிரவணித்தல். எதைச் சிரவணிப்பது? கேண்மையொடு பரனைப் பாடுவார் பாடலைக் கேளுங்கள். ஓசையும் ஒலியுமாகி, அவன் நாத நலம் அதனில் நடமிடும். சிரவணிக்கச் சிரவணிக்க, தன்வசம் இறக்கும்; பரவசம் பிறக்கும். வித்தகன் அறிவிப்பு, அதன்பின் விளங்கும்

சி – சத்து; வ – சித்து; ம் – இன்ப அமைதி. மற்று; சி – ஒளிக்கடல்; வ – உணர்வுக் கடல்; ம்– இன்பக் கடல். மேலும், சி – பேசா நிலை; வ –

பேசும் நிலை; ம்—அநுபவ ஞானம் என்பர். பேசிய இம் மூன்றும். ஒன்றை யொன்று பிரியாதன. சொரூப நிலையில், வியாபகமாகிச் சிவம் இப்படி விளங்கும். வியாபகத்தை இனிய தமிழில் 'இறை' என்று இயம்புவம். இறைக்குப் பகுதி இறு; எங் கும் தங்கல் என்பது இதன் பொருள்.

இது குறித்த சொரூப விஷயங்களை ஓயாது சிரவணியுங்கள். அந்த இறை, நம்மனோர் உய்ய அருளுருவத் திருமேனி கொண்டு அமையும். பய ஞன அத் திருமேனி, "சிவந்த பவளநிறம்". அறக் கருணையில் அப்படி ஒரு ஆட்சி. மறக் கருணை யில், "எரிபோல் மேனி"யை ஏற்பதும் உண்டு. திவ்ய குணங்களையும், அற்புதச் செயல்களையும், திறம் என்ற பெயரால் குறித்தார். சொரூப தடத்த நிலைகளில் சொல்லப் பெறும் அத் திருவருள் ஆற் றலை, அருள் நூற்கள் ஆன அளவு அறிவிக் கின்றன.

ஓதுவார் இடத்தில் உவகையுடன் செம்மை விநயம் காட்டிச் சேவித்து, செவி எனும் உங்கள் பெயரைச் சிறக்கச்செய்து கொள்ளுங்கள் என்று, உவந்து செவிகட்கு உபதேசித்தபடி.

"ஆமாத்தூர் அம்மானைக் கேளாச் செவியெல்லாம்
கேளாச் செவிகளே"

என்பது ஆளுடைய பிள்ளையார் அறிவிப்பு. (க)

4 மூக்கே நீ முரலாய் முது
காடுறை முக்கணனே
வாக்கே நோக்கிய மங்கை மணாளனே
மூக்கே நீ முரலாய்.

பதவுரை:- மூக்கே =, நீ முரலாய் = நீ மோந்து அநுபவிப்பாயாக; முது காடு உறை முக்கணனே = மயானத்தில் வாழ்கிற மூன்று திருக்கண்களை யுடையவனும்; வாக்கே நோக்கிய மங்கை மணாளனே = [தனது] வாய்மொழிகளை நோக்கி யிருக்கின்ற மாறு இளமை மாதேவியின் மணவாளனுமான பெருமானை; மூக்கே நீ முரலாய் =, [எ-று].

முகரும் தொழிலை யுடைய மூக்கே! பொய்ப் படும் வாசனையில் ஏமாந்து போகாதே!

சர்வ கந்தன் எனும் பெயரொன்று, சங்கரற்கு உளது. அப் பெயர்க்கு ஏற்ப, எம்பிரான் திரு மேனி இயற்கை மணம் எங்கும் விரவி யிருக் கிறது. அந்த அருள் மணத்தை, மோந்து கொண் டிருப்பதே முறை. மேலும் கேள்!

இறுதிக் கால ஊழித் தீ, உலகம் அனைத்தை யும் எரித்து விடும். கனலால் அழிந்த இடமெல் லாம், முது காடாகும். சாதாரணக் காடா அது?

மாயா பந்த நாசஞ் செய் ஞானக்கினி மயானம் அல்லவா?

அத் தனிமுது காட்டில் இருக்கும் த்யாபரன், ஒடுங்கிய உலகம் மீட்டும் உருவாக,

"சடமாசுகள் அழிவாகுமொர் சுடுகானிடை நின்றே
தடதாகிட தடதாகிட தடதாகிட தந்தா"

என்று அகோரக் கூத்து ஆடுகிறான். சந்திரன் இடக்கண்; சூரியன் வலக்கண்; நெற்றியில் ஞானக்கண்; அம் முதன்மைச் சுடர் மூன்றையும் முக்கண்ணாக் கொண்ட முதல்வனே, இடையறாது எண்ணுவதும் அவனை மோந்து கொண்டே யிருக்கும் முறை.

வரத சிவத்தின் திருவாக்கு, எந்த நேரத்தில் வருமோ என்று வாய்பார்த்து நிற்கிறாள் வரத தேவி. கட்டளைப்படி நடந்து வாழும் அவ்வழியை கருணையொடு உயிர்கட்குக் காட்டுகிறாள்.

இப்படி வாக்கே நோக்கிய மணமயமான அம் மங்கையை மணந்த மணாளன் சிவ பிரான்; அந்த அருமையை எண்ணியேனும், அவனையே மோந்து கொண்டிருக்க முன்னியிரு என்று, மூக்கை ஊக்கிய நோக்கு இது.

'என்னுள்ளே உயிர்ப்பாய்ப் புறம்போந்து புக்கு
என்னுள்ளே நிற்கும் இன்னம்பர் ஈசனே'

என்றும், வேறு ஓர் இடத்தில், விமலன் இருப்பை விளக்கியுளர்.

முரலல்—மோத்தல். வாக்கே நோக்கிய மங்கை என்பதற்கு, சொற்களின் வடிவான தொன்மை யிறைவி எனலும் ஒருவகை. மற்று, (அன்பர்கள் அன்பொடு மொழியும் துதி) மொழிகளை, அருளொடு திருவுளம் கொள்ளும் அமலை எனினுமாம். மணாளன்—மணவாளன் என்பதன் மரூஉ. மணத்தை ஆள்பவன்; திருமணம் செய்தவன் எனினுமாம். முது காடு-சர்வ சம்மார மயானம். (௪)

5 வாயே வாழ்த்து கண்டாய் மத
யானை உரி போர்த்து
பேய்வாழ் காட்டகத் தாடும்பி ரான்றன்னை
வாயே வாழ்த்து கண்டாய்.

பதவுரை:- வாயே வாழ்த்து கண்டாய்=வாயே! வாழ்த்தி [கனிந்த பயனைக்] காண்பாயாக; மதயானை உரி போர்த்து=மதங்கொண்ட யானையின் தோலை [மேலே]போர்த்துக்கொண்டு; பேய்வாழ்காடு அகத்து=

பேய்கள் வாழ்கிற [பெரு] மயானத்தில்; ஆடும் பிரான் தனை=திருக்கூத்தியற்றும் [இதயம்] அகலா எம்பெருமானை; வாயே வாழ்த்து கண்டாய்=, [எ-று].

'துயர்துடைத் தானை நோக்கி,
வாய்படைத் துடையார் எல்லாம்
வாழ்த்தினுர் வணக்கம் செய்தார்'

என்றுர் கம்பர்.

'ஐயாறு வாயாறு பாயாமுன் நெஞ்சே!
ஐயாறு வாயால் அழை'

என்றுர் ஐயடிகள் காடவர்கோன்.

'வண்ணனையே வாழ்த்துக என் வாய்' என்றும், 'வாயவனை யல்லது வாழ்த்தாது' எனவும் பிறர் ஏத்துவதை, வாயே! நீ அறியாயா? மேலும் கேள்!

கயாசுரன், வானவர் முனிவர்களைப் பல காலம் வருத்தினன். அஞ்சிய அமரர், விசுவேசரிடம் அடைக்கலம் புக்கனர். அதையறிந்தஅவன் எங்கும் வந்து ஆரவாரித்தான். விசுவநாதர், இலிங்கத்தி லிருந்து வெளிப்பட்டார். உறுத்து வந்த கயாசுரனை உதைத்தார்; உயிரை ஒழித்தார்;

அவன் தோலை உரித்தார்; நெறி பிறழ்ந்து, உறுப் பவர் தோலை உரிப்பவர் எனும் வரலாறு நீடித்து எவர்க்கும் நினைவில் இருக்க, தடித்த அவன் தோலை அங்கியாகத் தரித்தார்; இது ஒரு வரலாறு.

தாருவன முனிவர் பலர், ஒரு சமயம் அபிசார ஓமம்செய்தனர். அவ் வேள்வியி லிருந்து மலைபோல் எழுந்தது ஒரு யானை. இருந்தவ முனிவர்கள்ஏவியபடி அது, எம்பெருமானைஎதிர்த் தது. அதன் பின், விமலனை எடுத்து விழுங்கியது. வயிற்றுள் புகுந்த வரதசிவம், விசுவமாகி எழுந்து, யானையின் உடலைப் பிளந்து, தோலைப் போர்த்து. உக்ர நிருத்தம் செய்தது. இப்படியும் ஒரு வர லாறு இருக்கிறது. தொல்லை விளைவிப்பவர்தம் தோலை யுரிப்பவர் என்பதை, சீகாழிச் சட்டை நாதர் வரலாற்றாலும் அறியத் தகும்.

நம்பினரை யிப்படி யெல்லாம் காக்க வரும் நம்பன் பேராற்றலை, வாயே! நீ நாவாரப் பாடு; பாடிக் கொண்டே இரு!

மனமறியத் தீமை பல செய்தவர்கள், இறந்த பின்னும் பேயாகுர். வாட்டம் கொண்டு வருந் தித் திரிந்து, பிறர்க்கும் வேதனைதரும் பேய்கள் பல, அலறி உலறி எங்கும் அழுவதை அறிவாய்.

சீர்கெட்ட அவைகளைக் குறித்துச் சிந்திக்க வேண்டா.

பொல்லாத களிம்பகன்ருல், செம்பு பொன் ஞகும்; அதுபோல், சுத்த மாயா உருவம் கொண்டு, புனிதர் கண்கட்குப் புலஞகி, மேலான ஒளி வீசும் மேனியதாய், பெருமான் புகழ் பாடும் பேய்கள் பலவுள. இன்பமே அனுபவிக்கும் அவைகள், சிவகணங்கள் எனப்பெறும்.

பிரபோ! அருள் பெய்! பெய்!! பெய்!!! தெய்! தெய்!! தெய்!!! என்று அவைகள் ஆடி இன்புறும் ஆரண்யத்தில், அம்மான் தானும் ஆநந்தம் கொண்டு ஆடுகிருன். இது புறக்காட்சி.

இத் தேகம் ஒரு சடம்; இதனுள் ஆன்மா இருக்கிறது. சிவாலயத் திருவிழாக்களில், ஆண் பூதம் பெண்பூதம் ஆடுவதை அறிவோம். அது போல், 'பிணம் தூக்கித் திரிகின்றபேயின் கணங்கள்' என்று, உடல்சுமந்த உயிர்களை உணர்கின்ருர் மேலோர். உயிர் இருக்கும் இதயத் தில்லை வனத்திலும், பிரியாது கூத்து இயற்றுகின்ருன் பிரான். இது அகக் காட்சி.

"பேய்வாழ் காட்டகத்து ஆடும் பிரான்" அவன்; நினைவிருக்கட்டும்.

இத்துணை சிறந்த எம்மானை, வாயே! மறவாது வாழ்த்துவாயாக என்று, வாய்க்கு உபதேசம் வழுத்தியபடி.

கண்டாய் என்ற முன்னிலை யொருமை இறந்தகால வினைமுற்று, இடைச் சொல் தன்மை யெய்தி, தேற்றப் பொருளில் நின்றது. உரி-உரிக் கப் படுவது; செயப்படுபொருள் விகுதிபுணர்ந்து கெட்டது; கெடாத போது, உரிவையென நிற்கும். பேய்வாழ் என்றது, முதுகாட்டிற்கு அடைமொழி; தமது அடிமையான கணங்க ளுடன் ஆடுதல் பற்றி வந்த அடையெனினுமாம்.

சூக்குமை, பைசந்தி, மத்திமை, வைகரி எனும் வாக்குக்களை, வழிபடு முறையில் பயன்படுத்து என்பது குறிப்பு. (௫)

௬ நெஞ்சே நீ நினையாய் நிமிர்
புன்சடை நின்மலனை
மஞ்சா டும்மலை மங்கை மணாளனை
நெஞ்சே நீ நினையாய்.

பதவுரை:- நெஞ்சே நீ நினையாய்=மனமே! நீ தியானிப்பாயாக; நிமிர் புன்சடை நின்மலனை=எடுப் பான புற்கென்ற நிறமான சடையை யுடைய களங்கம்

அற்றவனும்; மஞ்சு ஆடும் மலை மங்கை மணாளனை = மேகங்கள் சஞ்சரிக்கும் இமய மலையின் மகளான பார்வதியார் கணவனுமான பெருமானை; நெஞ்சே நீ நினையாய் =, [எ-று].

மனனம் செய்யும் நிலையால், நெஞ்சே! உனக்கு மனம் என்ற பெயர் உளது. நெஞ்சு கொம்பு கெட்டால் நஞ்சாகும் என்பர். அதற்கு ஏற்பக் கண்டவைகளை யெல்லாம் கருதினையேல், அது தவறாகும்.

'பேய்வாழ் காட்டகத்து ஆடுவது' கோர வடிவம்.

'நிமிர் புன் சடை நின்மலன்' ஆவது யோக வடிவம்.

''மலைமங்கை மணாளன்'' ஆவது போக வடிவம்.

உயிர்கள் உய்தி பெற இம் முத்திற மேனி களையுடையவன் அம் முதல்வன். உத்தம அத் திருமேனிகளை இடையறாது உணர்ந்து இரு. இத் தடத்தத் திருமேனிகளை எப்போதும் எண்ணி யிருந்தால், சொரூபத்தில் உணர்வு தங்கிவிடும்; அதனால், பேறான உய்தி பெறுவை என்று, உறவு பூண்ட நெஞ்சிற்கு உபதேசித்தபடி.

"ஆமாத்தூர்
நிச்சல் நினையாதார் நெஞ்சமும் நெஞ்சமே"
"அத்தனடி நினைவார்க்கு அல்லல் அடையாவே"
என்பது இரண்டாம் திருமுறை.

"நெஞ்சம் உமக்கே இடமாக வைத்தேன்
நினையாது ஒருபோதும் இருந்தறியேன்"
என்றார் சுந்தரர்.

நிமிர்சடை – வினைத்தொகை. எளிமையை விளக்கலின், 'புன்சடை' என்றார் எனினுமாம். இப்பொருளில் புன்சடை–பண்புத் தொகை. நின்மலன்-குற்றம் அற்றவன்; வடசொல். மலைமங்கையைப் பர்வத ராஜ குமாரி என்பது வடமொழி மரபு. மஞ்சாடு என்ற அடை, மலையின் உயர்வை விளக்கியது. ஆடும் மலை என்பது விரித்தல். [சு]

7. கைகாள் கூப்பித் தொழீர் கடி
மாமலர் தூவி நின்று
பைவாய்ப் பாம்பரை ஆர்த்த பரமனைக்
கைகாள் கூப்பித் தொழீர்.

பதவுரை:- கைகாள் கூப்பித் தொழீர் = கைகளே! தூய முறையில் குவிந்து தொழுவீர்களாக; கடி மா

மலர் தூவி நின்று=மணம் கமழ் சிறந்த மலர்களை இட்டுஅர்ச்சித்து நின்று; பை வாய் பாம்பு அரைஆர்த்த பரமனே=படம் கொண்ட வாயுடைய பாம்பைக் [கச்சாக] இடையில் கட்டிய சிறந்தாரிற் சிறந்த சிவ பெருமானே; கைகாள் கூப்பித் தொழீர்=, [எ-று].

வெள்ளெருக்கு, வில்வம், நாயுருவி, அரளி, தாமரை, நாகலிங்கம், நந்தியாவர்த்தம், நெடு மல்லிகை எனக் காலையில் எண் வகை மலர்; பெரிய தும்பை, மந்தாரம், சங்கு மலர், வெண் பாதிரி, வழுதுணை, பொன் ஊமத்தை, புலிநகக் கொன்றை,வன்னி எனப்பகலில் எண்வகைப் பூ; வெட்டிவேர், சண்பகம், மகிழம் பூ, அலரி, குண்டு மல்லிகை,நித்திய மல்லிகை,சாதிப்பத்திரி, சம்பங்கி யென அர்த்த யாமத்தில் எண் வகைப் புட்பங்கள் என்று ஆகமங்கள் அறுதி யிடுகின்றன. அரும்பி, மலரும் பருவத்தில் மென்மை மணம் கமழ் அம்மலர்களை ஆண்டவன் திருவடிகளில் இட்டு அர்ச்சிப்பது அருமையாகத் தன்னைச் சந்நிதிகளில் அர்ப்பணிக்கும் அறிகுறி.

''கட்டராய் நின்று நீங்கள்
காலத்தைக் கழிக்க வேண்டா
எட்(டு) அவாம் கைகள் வீசி
எல்லி நின்று ஆடுவானை

அட்டமா மலர்கள் கொண்டு
ஆனஞ்சும் ஆட்ட ஆடிச்
சிட்டராய் அருள்கள் செய்வார்
திருச் சோற்றுத் துறையனூரே"

என்பர் நம் அப்பர்.

அப்படி அர்ச்சித்த பின், குவித்த கரங் கொண்டு கும்பிடுவது, 'நீயும் நானுமாய் ஏகபோக மாய்' இப்படித்தான் இறுகி இணைய வேண்டும் என்னும் குறிப்பு.

தாருவன முனிவர் ஏவ, நீண்டு சீறி வந்த நாகங்களைப் பரமன் இரு கரத்தாலும் பற்றினன். அவைகளை அணிகலனுக அணிந்தான். கச்சாக ஒன்றைக் கட்டினான்.

ஏவிய முனிவரும், ஏவப்பெற்று வந்த பாம்பு களும், கீழ்த்தர உணர்வின. அர்ச்சிக்க நீளும் கைகளும், அர்ச்சிக்கப் பயன்படு மலர்களும் மேன்மை நிலையின.

பயங்கர விடம் சிந்த வந்த பாம்பிற்கும் பய னளித்தோன், அதிவிநய அர்ச்சனைக்கு ஆர்வம் காட்டி நீளும் உங்கட்கு,வாய்த்ததன் இடையைத் தழுவ வழங்குவது இயற்கை. அவன், மேன்மை

உணர்வினரை உணரும் மேதகை. அதனுல், பரமன் எனும் நாமம் படைத்தனன். உணர்க இதனை என்று கைகட்கு உபதேசித்தபடி. இதய நடுவில் இருப்பானைக் கூப்பிச் சேர்ந்து புறம் போகாது இருப்பது புனிதம் என்பது குறிப்பு.

கூப்பி-கூம்பி என்பதன் பிறவினை. கடி-உரிச்சொல். அரை-உடலின் நடுவான உறுப்பிற்கு ஆகுபெயர். பரமன்-மேதகை எனும் பொருட்டு. (எ)

8. ஆக்கை யால்பயனேன் அரன்
கோயில் வலம் வந்து
பூக்கை யாலட்டிப் போற்றியேன் ஞுதஇவ்
ஆக்கை யால்பய னேன்.

பதவுரை:- ஆக்கையால் பயனென்=இவ்வுடம்பால் பயன் என்ன? அரன் கோயில் வலம் வந்து=சிவபெருமானுடைய திருக்கோயில் [பிராகாரங்களைச்]சுற்றி வந்து; பூ கையால் அட்டி=மலர்களைக் கையால் மிகுதியாகச் சொரிந்து: போற்றி என்ஞுத= [பயன் விளைய உலகைப்] பாதுகாப்பீராக என்று கூறித் துதியாத; ஆக்கையால் பயன் என்=[இவ்] உடலால் [பெறவுள்ள] பயன் யாது? [எதுவும் இல்லை] [எ-று].

வாய்த்த இப்பிறப்பு, முன்னைய தவத்தால் வந்தது. இது கருவில் அழியும்; பிறந்ததும் இறக்கும்; பிறந்து சிலநாள் இருந்து மரிக்கும்; பாலப் பருவத்தில் காலன் வசப்படும்; யௌவனத்தில் முடியும்; நரை திரை மூப்பு நண்ணி விழுந்திடும்; நீர்க்குமிழி போல்வது இதன் நிலை. முன்கூட்டிப் பயன் விளைய, முயலாமை முறையன்று.

"மானுடப் பிறவிதானும் வகுத்தது மனவாக் காயம்
ஆனிடத் தைந்தும் ஆடும் அரன்பணிக்காக அன்றோ"

என்கிறது சித்தியார். இதை உணர்ந்து, ஆலயத்தை வலம்வந்து, அமலனை மலரால் அர்ச்சித்து, காப்பு வேண்டிக் கதறுவதே ஆக்கையால் பெறும் அரும் பயன் என்று அறிவித்தபடி.

ஆக்கை–யாக்கை யென்பதன் மரூஉ; யாத்தல்–கட்டல்; என்பு நரம்பு முதலிய எழுவகைத் தாதுக்களால் ஆக்கப்பட்டது எனப் பொருள் படும் காரணக்குறி யெனினுமாம்; ஆக்கு – பிற வினைப் பகுதி; ஐ–செயப்படு பொருள் விகுதி. அரன்–அடியவர் துன்பத்தை அகற்றுபவன்; (அனைத்தையும் ஊழியில்) அழிப்பவன் எனலுமாம். கோயில்–கோ–இல்; இறைவனது இடம்; தலைசிறந்த நிலையம் என்பதும் உண்டு; யகரம்

இலக்கணப் போலி. வலம் வரல்-வலப்புறமாகச் சுற்றி வருதல். வாழிய என்பது வாழி என விகாரப்படுதல் போல், போற்றிய எனும் யகர ஈற்று வியங்கோள் வினைமுற்று, ஈற்று உயிர்மெய் கெட்டுப் போற்றியென நின்றது. (அ)

9. கால்க ளால்பயனேன் கறைக்
கண்டன் உறை கோயில்
கோலக் கோபுரக் கோகரணம் சூழாக்
கால்க ளால்பய னேன்.

பதவுரை:- கால்களால் =, பயன் என் = பயன் யாது? கோகரணம் = கோகரணம் எனும் (உயர்ந்த) தலத்தில் உள்ள; கோலக் கோபுரம் = சிறந்த கோபுரத்தை யுடைய; கறைக் கண்டன் உறை கோயில் = [நஞ்சுண்டு] கறுத்த கழுத்தை யுடைய சிவபிரான் எழுந்தருளி யுள்ள ஆலயத்தை; சூழா = வலமாகச் சுற்றி வராத; கால்களால் பயன் என்?-, [ஒரு பயனும் இல்லை], (எ-று).

இலங்கை என் ஆட்சியில் இருக்கிறது; அப்பதி அழியாதிருக்க அருள் என்று, சிவத்தை எண்ணி இராவணன் சிறந்த தவம் செய்தான். அவன் தவத்திற்கு இரங்கி, வேண்டுவார் வேண்டுவதே வழங்கும் விமலன் வெளிப்பட்டான்.

வைத்தபின் எடுக்க இயலாது; இது இருந்த இடம் அழியாது; தக்க இடத்தில் தாபனம் செய் என்று, இலிங்கம் ஒன்றை இறைவன் அருளினன்.

இன்பத்தொடு அதை வாங்கிய இராவணன், இறுமாந்து நடந்தான். எதிர்கால நிலை யறிந்த எம்மான் கணபதி, அவனுக்குச் சிறுநீர் சுரக்கச் செய்து, இளஞ்சிறுவராய் எதிர்நின்றார்.

ஏய் பிரமசாரி! பிடி! இதைப்பிடி! விரைவில் திரும்புவன் என்று, அவர் இளமைத் திருக்கரத்தில் இலிங்கத்தை வைத்துவிட்டு, ஒதுக்கிடம் சென்றான்.

கணநேரம் பொறுத்த கணபதி, பாரம்! பாரம்! பாரமா யிருக்கிறதே என்று மூன்றுதரம் கூவி, மகிமை யுடைய அந்த இலிங்கத்தை மண்ணில் வைத்தார்.

அக்குரல் கேட்டு ஓடிவந்த இராவணன், நிலத்துள் வேரோடிய அவ் விலிங்கத்தை, தன் இருபது கைகளாலும் வலிந்து ஈர்த்தான். கன்றை ஈன்ற பசுவின் காதுபோல், குழைந்த தன்றிப் பெயர்ந்திலது இலிங்கம்.

என்ன அதிசயம்? கோகரணம் போல் குழைகிற இது, மாபலம் உடையது என்ருன் இராவணன்.

எண்ணம் அவலம் எய்தியது எனினும், உன் வாக்கில் வந்த இரு பெயர்களும், என்றும் இருக்கும் என்று அருளொடு உரைத்தது அசரீரி.

அன்று முதல் அந்த இடம் கோகரணம் எனவும், இறைவர் மகாபலேசர் என்றும் எண்ணப் பெறுகிருர்.

ஆக்கையை நான்கு பாகமாக அளந்தால், கால் பாகத்திற்கு அமைந்த பெயர் கால்கள்தான்; இது எண்ணலளவை யாகுபெயர். இரு கால்கள் இருக்கின்றன; இருந்து என்ன பயன்? கேளுங்கள்!

கால்களே! கண்ட இடமெல்லாம் ஓடியோடி உழன்று பயன் இல்லை. உலகில் நீங்கள் ஊன்றி யிருக்க வேண்டுமேல், காலூன்றிய கோகரணத்தை வலம் செய்யுங்கள்; வாழ அதுவே வழியென்று, அருமைக் கால்கட்கு அறிவித்தபடி.

கோகர்ணம்–துளுவ நாட்டுத் தலம். கோ-பசு; கர்ணம் - காது. (க)

10 உற்றார் ஆருளரோ உயிர்
கொண்டு போம் பொழுது
குற்றா லத்துறை கூத்தனல் லால்நமக்(கு)
உற்றார் ஆருளரோ.

பதவுரை:- உற்றார் ஆர் உளரோ = [இடையூறு விளைந்தபோது இடைவந்து) உதவுகிற உறவினர் வேறு எவர் உளர்?; உயிர்கொண்டு போம்பொழுது = [காலன் வந்து] உயிரைக் கவர்ந்து செல்லும் பொழுது; குற்றாலத்து உறை கூத்தன் அல்லால் = திருக்குற்றாலம் எனும் திருப்பதியில் எழுந்தருளி [இன்ப] நிருத்தம் செய்யும் எம்பெருமான் ஒருவனே அல்லாமல்; நமக்கு உற்றார் ஆர் உளரோ = நம் விஷயத்தில் அன்புகொண்டு உதவி செய்பவர் வேறு எவர்தாம் இருக்கின்றனர்? [எ-று].

"எத்தாயர் எத்தந்தை எச்சுற்றத்தார்
எம்மாடும் சும்மாடாம்; ஏவர் நல்லார்?
செத்தால்வந் துதவுவார் ஒருவரில்லை;
சிறுவிறகால் தீமூட்டிச் செல்லா நிற்பர்"

என்றும்,

"நடலை வாழ்வுகொண்(டு) என் செய்தீர் நாணிலீர்!
சுடலை சேர்வது சொல்பிர மாணமே?"

என்றும், யாம் முன் அருளியவைகளை அறியாயா?

ஆயுள் முடிந்ததும் ஆக்ரமித்து வந்து, பாசத் தால் சுவாசத்தைக் கட்டி ஈர்ப்பர் காலதூதர்; அந்நாளில், அலமந்து வருந்தும் ஆன்மா.

அதற்கு முன் தன்னை எண்ணியிருந்ததைத் திருவுளங் கொண்டு, உவந்து திருவருள் முன் வந்து உதவும்.

திருக்குற்றாலம் என்பது, பாண்டி நாட்டில் உள்ள பழம்பதி. பொற்சபை, வெள்ளிச் சபை, தாமிர சபை, இரத்தின சபைபோல், சித்திர சபை அங்குச் சிறந்திருக்கின்றது. அச் சபையில் இருப் பவர் சித்திர சபாபதி; கன்மவினை களைந்து, கால பயம் தீர்த்து, அற்புத முத்தி தரும் ஆபத் பந்து; ஆத்மபந்து அவர். அவரை ஏத்திப் போற்றியிரு; சொன்னேன் அதுவே சுகம் என்றபடி. அருமை யான இந் நுட்பத்தை யறிந்து,

"காலன் வருமுன்னே கண்பஞ் சடைமுன்னே
பாலுண் கடைவாய் படுமுன்னே—மேல் விழுந்[து]
உற்றார் அழுமுன்னே ஊரார் சுடுமுன்னே
குற்றாலத் தானையே கூறு"

என்று பாடுவார் பாடலும் இங்குப் படிக்கத் தகும்.

நமக்கு என்ற தன்மைப் பன்மை, உயிர்களை யெல்லாம் உளப்படுத்தியது. உற்ருர்—உறவினர்; வினையாலணையும் பெயர். (ம)

11 இறுமாந் திருப்பன் கோலோ ஈசன்
பல்கணத் தெண்ணப் பட்டுச்
சிறுமான் ஏந்திதன் சேவடிக் கீழ்ச்சென்று
இறுமாந் திருப்பன் கோலோ.

பதவுரை:- இறுமாந்து இருப்பன் கொலோ= [யான் ஒரு சிறிதும் கவலை யின்றி, இன்பம் கொண்டு] இறுமாந்து இருப்பேனே?; ஈசன் பல் கணத்து எண்ணப்பட்டு=[எப் பொருப் கும்] இறைவனை சிவபெருமானது [தொண்டராய், அவனையடுத்து நிற்கின்ற] பல வகையான கூட்டத்தில் [யானும் ஒருவனுக] எண்ணித் தொகையிடப் பெற்று; சிறுமான் ஏந்தி தன் சேவடிக் கீழ் சென்று=சிறிய மானை [இடது திருக்கரத்தில்] ஏந்திய அப் பெருமானுடைய செம்மைத் திருவடி நிழலில் சென்று சேர்ந்து; அங்கு= அந்த இடத்தில்; இறுமாந்து இருப்பன் கொலோ=, [எ-று].

தலையால் வணங்கி, கண்களால் கண்டு, செவிகளால் சிரவணித்து, மூக்கால் மோந்து, வாயால் வாழ்த்தி, நெஞ்சால் எண்ணி, கைகளால் தொழுது, ஆக்கையின் பயனை யறிந்து, கால்

களால் கோயிலை வலம் வந்து, இறுதி நாளில் இறைவனே துணையென்று இருந்தவர்க்கு, ஆகாமிய வினை இல்லை; சிவ புண்ணியம் சிறக்கும்; மாயையின் ஆட்சி மடங்கும்; ஆணவக் கொட்டம் அடங்கும். இந் நிலை பெற்ற அவர்கள், இறைவன் திருவடி நிழலில் இன்புறுவர்.

''மாசில் வீணையும் மாலை மதியமும்
வீசு தென்றலும் வீங்கிள வேனிலும்
மூசு வண்டறை பொய்கையும் போன்றதே
ஈசன் எந்தை யிணையடி நீழலே''

எனும் அந்த இன்ப அநுபவத்தில் இருப்பவர்,

''நாமார்க்கும் குடியல்லோம்; நமனை யஞ்சோம்;
நரகத்தில் இடர்ப்படோம்; நடலை யில்லோம்;
ஏமாப்போம்; பிணியறியோம்; பணிவோம் அல்லோம்;
எந்நாளும் இன்பமே துன்பம் இல்லை;
தாமார்க்கும் குடியல்லாத் தன்மை யான
சங்கரன், நல் சங்க வெண் குழையோர் காதில்
கோமாற்கே நாமென்றும் மீளா ஆளாய்க்,
கொய்ம்மலர்ச் சேவடி யிணையே குறுகினோமே''

என்று இறுமாந்து பாடுவது இயற்கை.

சிவகணத்தவர்—கபாலீசர், விசோகர், சதா நேத்திரர், சதாநிலர், அநந்த ருத்திரர், கராள

வதனர், பாரபூதி, சோமவர்ஷர், மகாகாயர், சோமர், நிகும்பர், சங்கரர், சூரியாப்பியானர், சர்வமானி, கடாகடர், சங்கு கர்ணர், நந்திகர், பிங்காட்சர், கூஷ்மாண்டர்,ஏகபாதர் முதலினோர்.

ஏந்தி என்பதில், இ - கர்த்தாப் பொருள் விகுதி. இறுமாந்துஎன்பதில், இறுமா-பகுதி.(கக)

12. தேடிக் கண்டு கொண்டேன் திரு
மாலொடு நான்முகனும்
தேடிக் காணொணாத் தேவனை என்னுள்ளே
தேடிக் கண்டு கொண்டேன்.

பதவுரை:- தேடிக் கண்டுகொண்டேன் =[உணர்வுக் கனல் கொண்டு ஊடுருவித்] தேடி, [உள்ளக் கண்களால்] கண்டு, [இதய வீட்டில் இருத்திக்] கொண்டேன்; திருமாலொடு நான் முகனும் = [காப்பாரும் படைப்பாரும் ஆன] திருமாலும் பிரமதேவரும்; தேடிக் காண் ஒணா தேவனை =[அடி யென்றும் முடியென்றும் புறத்தில்) தேடிக் காண இயலாது பின்வாங்கிய பேரொளிப் பிழம்பான பெருமானை; என் உள்ளே =என் உள்ளக் கமலத்தில்; தேடிக் கண்டு கொண்டேன் =, [எ-று].

ஏதமிலா வேத முதல்வன் எங்கும் உளன்; மதிப்பிற்குரியது மற்று மொரு செய்தி.

இதய குகையில் இரண்டான்மா என்று, உவந்து கூறுகிறது உபநிடதம். ஒன்று சிவம்; மற்றொன்று சீவன். இதய சிதம்பரத்தில், ஞான ஒளி பொங்கித் ததும்பிப் பூரிக்கிறது. வாழுமாறு உயிர்கட்கு வழிகாட்ட, அங்கு முளன் அந்த அம்மான். புனித உணர்வு புறம் செலாமல் இருக்கும் இடத்தில் இருந்தால், ஊன்றி அசையாது உணர்ந்தால், அந்த அருள் முதல் அகப்படும்.

வியாபக விமலனை, உள்ளக் கண்கொண்டு உணராமல், புறத்திற் புந்தி செலுத்தில் பயன் பொய்த்துவிடும்.

சொரூபம் வித்து; தடத்தம் அதனி லிருந்து விளைந்த தரு ஆலய வழிபாட்டில் எந்த மூர்த்தத்தையும் தரிசிப்போர், கண் மூடிக் கரங்குவித்தல், இயற்கை நியதியாக இருக்கிறது.

கண்களால் திருவுருவைக் கண்டு, அதன் மூலம் இன்ப ஒருமை எய்தி, அகண்ட வியாபக சச்சிதாநந்தத்தில் உணர்வை உறவுகொளச் செய்வது அந் நிலை.

இந் நிலையில் இருந்தவரைப் பின்பற்றி, இன்றும் எண்ணிறந்தோர் இருக்கின்றனர்.

அடி காண்பம், முடி காண்பம். என அகங்கரித்து புறத்தில் தேடினர் ஏமாந்தார். அடியேன் என் அகத்தில் தேடினேன். எம்பெருமான் அகப்பட்டான் எனும் இந்நிலை சத்வகுண அகங்காரம் எனப்பெறும். (கஉ)

ஒவ்வொரு உறுப்பிற்கும் உபதேசப் பெயரால் அற்புதமான திரு அங்கமாலையைப் பாடியவர் அப்பர் பெருமான். அவரது,

இடையறுப் பேரன்பும் மழைவாரும்
இணைவிழியும், உழவாரத்தின்
படையறுத் திருக்கரமும், சிவ பெருமான்
திருவடிக்கே பதித்த நெஞ்சும்,
நடையறுப் பெருந் துறவும், வாகீசப்
பெருந்தகைதன் ஞானப் பாடல்
தொடையறுச் செவ்வாயும், சிவவேடப்
பொலிவழகும் துதித்து வாழ்வாம்.

வாழ்க உலகம்! வளர்க திருவருள்!!

திருச்சிற்றம்பலம்.
